# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2083/25 - 2018 අගෝස්තු මස 09 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.08.09

*2083/25 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 09 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### *1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டம்*

*9(2)(ஆஆ) (i) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

*உள்ளக அலுவல்கள் மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சர் எஸ். பி. நாவின்ன ஆகிய நான், 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் 9(2)(ஆஆ)(i) ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், மேற்சொன்ன 9 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்வதற்காகவும் மற்றும் முதற் தடவையாக தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்வதற்காகவும் சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பப்பத்திரமொன்றுக்கு உரியதாக 2018.09.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் வகையில் நூறு ரூபா கட்டணமொன்றைச் செலுத்த வேண்டுமென இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகின்றேன்.*

*இவ்விடயம் தொடர்புடையதாக 2015, யூலை மாதம் 08 ஆந் திகதிய 1922/25 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலை இத்தால் இரத்துச் செய்கின்றேன்.*

*எஸ். பி. நாவின்ன,*
*உள்ளக அலுவல்கள் மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சர்.*

*பத்தரமுல்லை,*
*2018, ஒகத்து 07.*

*08-821/1*

---

### *1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டம்*

*16(2)(ஆ) (i) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

*1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் 16 (2) (ஆ) (i) ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், உள்ளக அலுவல்கள் மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சர் எஸ். பி. நாவின்ன ஆகிய நான், 2018.09.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் வகையில் மேற்சொன்ன 16 ஆம் பிரிவின் கீழ் தேசிய அடையாள அட்டையொன்றின் இணைப் பிரதியொன்றை விநியோகிப்பதற்கான கட்டணம் ஐந்நூறு ரூபாவாக இருத்தல் வேண்டுமென இவ்வறிவித்தல் மூலம் கட்டளையிடுகின்றேன்.*


1A-PG 4160 — 20,007 (2018/08)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இவ்விடயம் தொடர்பாக 2015, யூலை மாதம் 08 ஆந் திகதிய 1922/25 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலை இத்தால் இரத்துச் செய்கின்றேன்.

எஸ். பி. நாவின்ன,
உள்ளக அலுவல்கள் மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சர்.

பத்தரமுல்லை,
2018, ஓகத்து 07.

08-821/2

---

**1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டம்**

அறிவித்தல்

**ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் 17(2) ஆம் பிரிவின் கீழ், அடையாள அட்டைகளின் திருத்தம் செய்யப்பட்ட இணைப் பிரதிகளை விநியோகிக்கும் போதும் மற்றும் சட்டத்தின் 17(4) ஆம் பிரிவின் கீழ் செல்லுபடிக் காலம் முடிவடைந்த தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக புதிய தேசிய அடையாள அட்டையொன்றை விநியோகிக்கும் போதும் அறவிடப்படுகின்ற கட்டணங்களில் திருத்தம் செய்தல்**

2018.09.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில், ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் கீழ்க்காணும் அட்டவணையில் காணப்படும் பணிகளுக்காக அறவிடப்படும் கட்டணங்கள், அந்தந்தப் பணிக்கு முன்னால் காட்டப்பட்டுள்ள அளவுகளுக்கு ஏற்றவாறு திருத்தம் செய்யப்படுகின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

இவ்விடயம் தொடர்பாக 2015, யூலை மாதம் 08 ஆந் திகதிய 1922/25 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலை இத்தால் இரத்துச் செய்கின்றேன்.

எஸ். பி. நாவின்ன,
உள்ளக அலுவல்கள் மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சர்.

பத்தரமுல்லை,
2018, ஓகத்து 07.

**அட்டவணை**

| | பணி | கட்டணம் |
|---|---|---|
| 1. | 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஆட்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 17(2) ஆம் பிரிவின் கீழ், அடையாள அட்டையொன்றின் திருத்திய இணைப் பிரதியொன்றை விநியோகித்தல் | ரூ. 250/- |
| 2. | 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஆட்களைப் பதிவு செய்யும் சட்டத்தின் 17(4) ஆம் பிரிவின் கீழ், செல்லுபடிக்காலம் முடிவடைந்த தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக புதிய தேசிய அடையாள அட்டையொன்றை விநியோகித்தல் | ரூ. 100/- |

08-821/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.